# TAMILNADU POWER ENGINEER'S ORGANISATION

Regd. No.2998/CNI
Under Indian Trade Union Act, 1926
Affiliated to COTEE & EEFI

No.27, Mosque Street, Chepauk,
Chennai - 600 005.
Phone : 2854 8529
Fax : 2851 6574
E-mail : coteecitu@gamil.com
tnpeogs@gmail.com

President **T. ARIVAZHAGAN** | General Secretary **R. SRIDHAR** | Treasurer **K. JEEVANANDAM**

***ORGANISING SECRETARY***

**K. Arul Selvan**

***DEPUTY GENERAL SECRETARIES***

**S. Appadurai**
**M. Parimelazhagan**

***VICE PRESIDENTS***

**D. Kumar**
**R. Guruvel**
**A. Palani**
**V.K. Thanikaiarasu**
**M. Rama Subhu**
**K.R. Jothiraman**
**G. Sankareswaran**
**P. Aarumugham**
**V. Lakshminarayanan**

***SECRETARIES***

**R. Adalarasu**
**P. Kumaresapandian**
**M. Muni Raj**
**S. Marimuthu**
**K.S. Meenakshi Sundaram**
**A.E. Arunachalam**
**K.R. Alagarsamy**
**J. Balamurugan**
**B. Nithiya**
**J.J. Pradeep**

பெறுநர் 07.03.2013.

தலைவர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி (ம) பகிர்மானம் கழகம்
144, அண்ணா சாலை,
சென்னை-2.

ஐயா,

பொருள்: உதவி செயற்பொறியாளர் (இயந்திரவியல்) – பதவி உயர்வில் – தகுதிகாண பட்டியல் – உள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டுவது சம்மந்தமாக.

பார்வை:
1. CE/P Letter No.8677/126/G-1/G.11/2013-2 dt. 05.02.2013.
2. CE/P Letter No.8677/126/G-1/G.11/2013-3 dt. 23.02.2013
3. Memo.No. 015979/G.15/G.151/2013 , dt. 23.02.2013.
4. CE/P Letter No.8677/126/G-1/G.11/2013-4 dt. 02.03.2013.

************

பார்வை 1-ன் படி 05.02.2013 உதவி செயற்பொறியாளர் (இயந்திரவியல்) பதவி உயர்வுக்கு 49 உதவி பொறியாளர்களுக்கும், 19 இளநிலை பொறியாளர்களுக்கும் தகுதிகாண் பட்டியல் கோரப்பட்டது.

உதவிப்பொறியாளர்களுக்கான(இயந்திரவியல்) வரிசை பட்டியல் வாரியத்தில் கடந்த 2003ம் ஆண்டு முதல் வெளியிடப்படவில்லை மற்றும் பார்வை 1-ல் வெளியிடப்பட்டுள்ள தகுதிகாண் பட்டியலில் குறைபாடுகள் இருப்பதை சுட்டிக்காட்டியதின் அடிப்படையில், பார்வை 2-ல் உள்ள கடிதத்தின் படி 23.02.2013-அன்று பதவி உயர்வுக்கான பட்டியல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

பார்வை 3-ன் படி 23.02.2013-ல் உதவி பொறியாளர்/இயந்திரவியல் வரிசை பட்டியல் 2003 ம் ஆண்டு முதல் 2011 வரை வெளியிடப்பட்டுள்ளது, அதில் ஒரு மாதத்திற்குள் வரிசை பட்டியலில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் சம்மந்தப்பட்ட அலுவலகத்தின் மூலமாக தெரிவிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

வாரிய விதிகளின் படியும், இதுவரை உள்ள நடைமுறையின் படியும் முதலில் வரிசை பட்டியல் வெளியிட வேண்டும் அதன் பிறகு தான் தகுதிகாண் பட்டியல் கேட்பது என்பது முறையாகும். மேலும் வகுப்பு-1 ல் உள்ள அதிகாரிகளுக்கு வருடத்திற்கு ஒருமுறை வரிசைப் பட்டியல் வெளியிடப்படுகிறது. ஆனால் வகுப்பு-2 ல் உள்ளவர்களுக்கு வரிசைப் பட்டியல் என்பது முறையாக வெளியிடப்படுவதில்லை.

23.02.2013 அன்று வெளியிட்ட வரிசை பட்டியலுக்கான கடிதம் தனி நபர்களுக்கு இன்று வரை கிடைக்கப் பெறவில்லை என்பதை வருத்தத்துடன் சுட்டிகாட்டுகிறோம் அப்படி இருக்கும் போது அவசர அவசரமாக பத்து நாட்களுக்குள்ளாகவே மீண்டும் தகுதி காண் பட்டியல் பார்வை 4-ன் படி 02.03.2013-ல் உதவிப்பொறியாளர்கள் 48 நபர்களுக்கு கோரப்பட்டுள்ளது. இதற்கு இணையான இளநிலைப் பொறியாளர்களுக்கான தகுதிகாண் பட்டியல் வெளியிடப்படவில்லை.

இது போன்ற நடவடிக்கைகள் வாரிய விதிமுறைகளுக்கு எதிரானது. ஒரு சில தனி நபர்களின் தூண்டுதலாலும், உள்நோக்கத்துடனும் 02-03-2013 அன்று தகுதி காண் பட்டியல் வெளியிடப்பட்டதாக தெரியவருகிறது. தலைமைப்பொறியாளர் பணியமைப்பு அவர்களிடம் பல விஷயங்கள் மறைக்கப்படுகிறது. மற்றும் இது லஞ்ச லாவண்யத்துக்கு வழிவகுக்கிறது. எனவே இந்த விஷயத்தில் உடனடியாக தலையிட்டு வரிசைப் பட்டியலை இறுதி செய்த பிறகு தகுதி காண் பட்டியல் கோருவது நியாயமாகும் என்பதை இந்த கடிதத்தின் மூலமாக தெரிவித்துக் கொள்கிறோம். மற்றும் இது போன்ற குளறுபடிகள் நடைபெறாதவாறு பணியமைப்புக்கு தகுந்த ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

இப்படிக்கு,

(தி. அறிவழகன்)தலைவர்/TNPEO